990

# கொங்கு மலர்

13 AUG 1935




யுவ-ஆண்டு ஆடித்திங்கள்.

மலர் உ இதழ் ச

ஆண்டுக்கட்டணம் ரூ. 1—8—0.

தனிப்பிரதி அணா 0—2—0.

# உள்ளுறை.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் (செய்யுள்) | 99 |
| 2. | பழைய பாட்டு ,, | 99 |
| 3. | குற்றமும் குணமும் ,, | 100 |
| 4. | நடமாடுங்கோயில் ,, | 101 |
| 5. | பண்டைய சரித்திரம் | 103 |
| 6. | மகா வித்வான் சந்திரசேகரம் பிள்ளை | 107 |
| 7. | நாடகத்தமிழ் | 112 |
| 8. | ஆனந்தம் | 117 |
| 9. | புதுவை ஆநந்தரங்கப் பிள்ளை | 120 |
| 10 | குன்றுதோறாடல் | 124 |
| 11. | சென்னகேசவப் பெருமாள் கோயில் சிற்ப விசேடங்கள் | 127 |
| 12. | மதிப்புரை | 130 |

கொங்கு மலர்

கோவைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

யுவ-ஆண்டு ஆடித் திங்கள்.

# செய்யுட் பகுதி.

## கடவுள் வணக்கம்.

மையார் மணிமிடறன் மங்கையோர் பங்குடையான் மனைகள்தோறும்
கையார் பலியேற்ற கள்வன் இடம்போலுங் கழல்கள்நேடிப்
பொய்யா மறையானும் பூமி யளந்தானும் போற்றமன்னிச்
செய்யார் எரியாம் உருவ முறவணங்குந் திருநணாவே.

திருநணா—திருஞான சம்பந்தர் தேவாரம்.

## பழைய பாட்டு.

### கொங்குநாட்டில் ஸ்ரீமத் சுந்திரமூர்த்திகள் செய்த முதல் விஜயம்.

ஆயிடை நீங்கி அருளினர் செல்வார்
அருவரைச் சுரங்களும் பிறவும்,

பாயுநீர் நதியும் பலபல கடந்து
பரமர்தம் பதிபல பணிந்து,

மேயவண் தமிழால் விருப்பொடும் பரவி
வெஞ்சமாக் கூடலும் பணிந்து,

சேயிடை கழியப் போந்தவர் தடைந்தார்
தென்திசைக் கற்குடி மலையில். (செ. 92)

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்
—பெரிய புராணம்.

## புதுச் செய்யுள்

### குற்றமும் குணமும்.

குற்ற மின்றிக் குணமே காண்டல்
முற்றிய உலகின் முறையே அன்று.
வள்ளுவர் சாக்ரடிஸ் வகைபெரும் அறிஞர்
உள்ளுவர் அதனின் உண்மையும் உணர்ந்தே.
பிணியுடை மகவின் பீடைதீர்க் கத்தாய்
உணக்கொடு மருந்தை உயர்தேன் என்பாள்.
நட்பினர் சேனை நலிந்திடக் கேட்டும்
நட்பமும் அறிவியாது நவன்றிடும் தலைவன்
"தன்னுடை நண்பன் தனித்தே வென்றதால்
என்னுடை வீரரே, இனிநீர் வெல்வீர்."
எனவே,
தாயும் தலைவனும் தந்த செய்கை
ஈயுமோ மெய்தனின் இயற்கை முற்றும்?
உலகை வெறுத்தே உயிரை விடத்துணிந்
தலகைக் கிணற்றில் ஆழ்ந்திட எண்ணும்
மனிதனுக் குணர்த்தும் மணிமொழி என்னும்!
தனிமிதிக் காலால் தள்ளியே யுதைத்திடின்
புத்தி தெளிந்துப் போவான் வீடு.
இத்தனைச் செய்யினும் இலதோ கருணை?
ஆயின், குணமதில் அல்லது சேரினும்
ஈயும் இன்பம் இதுவே உலகியல்.

—கோவைக்கிழார்.

---

உணக்கொடு = உண்ணக் கொடுக்கும்.

## மொழி பெயர்ப்பு

## * நடமாடுங் கோயில்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 AUG 1936
MADRAS

ஞாயிறுகள் கோடிகளாய் நடனமுடன்
ஒளியுமிழும் விண்ணில் தானே,
ஆயிரமாய்த் தீவுகளில் அலைபடரும்
கடல்தவழும் புவியில் தானே,
பாயிரமாய் நின்றனையே படைத்தருளும்
பரமனது புகழும் தோன்றும்?
கோயுலுமாம் நின்உருவம் கொண்டுளதே
அழிவறியா ஞானச் செயலை.

ஒளிமறைவின் சிறுகுகைகள் வழிநெடுக
இளம்பவனம் மெதுவாய் அசைந்து
களிமகிழ்வில் மெல்லியவாய்க் காற்சென்னீர்
ஓடுகையில் கலந்து வீசி
எளிமையினில் வேண்டலிரா இழிவகையாம்
பொருளினையே இழுத்துக் கொண்டு
வெளிமடத்தில் அகற்றிவிட வியப்புருவாய்
குருதியுமே செம்மை மிக்கும்.

ஒருகணமும் இளைப்பாறல் உளமிலதாய்
நடுக்கமுறும் தொழிலை இயற்றி
திருகிடச்செல் குழற்சலம்போல் துறுத்தியிடை
வீசியிடத் தெளிநீர் ஓடும்
பெருகியுளக் குழல்வழியே பிரிவுறுத்தி
எரிகனல்சேர் உயிர்நீர் வகுத்து
குருதியுமோ அழிவுறுமாம் கூறுகளுக்
குணர்வளித்துக் கூடும் இதயம்.

மாறுதலே இல்லாத மாஅனலால்
வெதுப்புறுமிந் நடையா லயமே
சாறுதனில் உயிர்பெற்ற குண்டாலும்
சனலாலும் இணைக்கப்பட்டு

மீறுதலே இலாவகையில் மெல்லியதாம்
சங்கிலியால் எல்லா அங்கம்
வீறுதலில் ஆட்டிடவே வீற்றிருக்கும்
மூளையுமே தலைமை வகிக்கும்.

வெண்மையதாய்த் தோன்றுமொளி எழுநிறங்கள்
சேர்ந்துளதாய் ஆயிற்றன்றோ
நுண்மையதாய் உயிரிலங்கும் கண்ணாடிக்
கோளங்கள் நுனியும் மாறு
உண்மையதாம் இன்னிசைகள் உவர்கடலின்
அலைகள்போல் திரண்டுருண்டு
வண்மையதாய் குகைகளிடை வழியனைத்தும்
நுழைந்துள்ளே அறிவித்திடுமே.

பிளவுடைய நிணமூளை பிரித்தறியா
மடிப்புகளில் நினைவை ஊட்டும்
அளவிலதாம் உணர்வுகளை அணுவளவும்
அறிந்திடலால் அண்டம் ஆளும்.
உளவறியா திருண்டிருக்கும் உள்ளறைகள்
அகல் நிலத்தின் புரட்சி காட்டும்
வளமுடைய வெண்நூல்கள் வழியாக
பெருஞ்சத்தி செலுத்தி வருமே.

நடமாடும் அற்புதமாம் இக்கோயில்
நினதாக்கி நல்கி அருளாய்,
தடுமாடும் தளர்வயதும் உலகினுறும்
சச்சரவும் உயிரைத்தின்று
கெட ஆடும் கைகால்கள் சேர்ந்திடவே
இருட்டுமயம் கிட்டும்போது
படமாடும் தயையிருத்தித் தேவுருவாய்ப்
பண்ணியருள் பரம மூர்த்தி.!

—கோவைக்கிழார்

*ஆங்கிலத்தில் O. W. Holmes எழுதின The Living Temple என்பதைத் தழுவி எழுதியது.

# சரிதப் பகுதி.

## பண்டைய சரித்திரம்.

### கொங்குதேச ராஜாக்கள்.

கொங்குதேசராஜாக்கள் என்ற தமிழ்க் கையேட்டுப் பிரதியில் கொங்கு நாட்டில் கங்க வம்சத்தார் அரசாண்டதற்கு முந்தி ரெட்டி குலத்தில் தோன்றிய ஏழு அரசர்கள் இந்நாட்டை ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவர்கள் பெயர்கள் அடியிற்கண்டபடி குறிக் கப்பட்டிருக்கின்றன.

1. ஸ்ரீ வீரராஜ சக்கரவர்த்தி.
2. கோவிந்தராயர்.
3. கிருஷ்ணராயர்.
4. கலவல்லவராயர்.
5. கோவிந்தராயர்.
6. சதுர்ப்புய கன்னரதேவ சக்கரவர்த்தி.
7. திருவிக்கிரமதேவ சக்கரவர்த்தி.

இவர்கள் எல்லாரும் ரெட்டி குலத்தவர்கள் என்றும் அவர்கள் ஸ்கந்தபுரத்தில் அரசாண்டார்கள் என்றும் அந்நூலில் கூறப்பட்டுள்ளது. அரசு தகப்பனுக்குப் பின் மகன் அவனுக்குப்பின் அவன் மகன் என்ற முறையில் சென்றது என அறிகிறோம். அவர்கள் சூரிய வம்சத்தவர்கள் என்றும் அறிகிறோம். ஒருவனைவிட ஒருவன் அதிக கீர்த்தியோடு ஆண்டதாக எழுதப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லாரும் ஜெயினமத்தினர்கள். கடைசி அரசன் சைவ மதத்தில் பிரவேசித்ததாகத் தெரிகிறது. இனி இவர்களைப்பற்றி சிறிது விவரமாகக் கூறுவோம்.

1. ஸ்ரீ வீரராஜ சக்கரவர்த்தி. இவ்வரசன் கலியுகத்தில் முதலில் கொங்கு தேசத்தில் ஸ்கந்தபுரத்தில் ரெட்டி குலத்தில் தோன்றி அத்தேசத்திற்கு அரசனுகிக் கிரீடம் தரித்து சகல பாக்கியத்தையும் அடைந்து நல்ல ஞானமுடையவனுக அரசாண்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. இவ்வரசன் கலியுகத்தில் எந்த ஆண்டில் அரசாண்டான் என்பது தெரியவில்லை. ஸ்கந்தபுரம் என்பது கொங்கு தேசத்தில் எங்கு உள்ளது என்பதும் தெரியவில்லை. லேசன் (Lassen) என்ற ஆசிரியர் ஸ்கந்தபுரம் என்பது கஜ்ஜல் ஹட்டிக் கணவாயில் இருக்கலாம் என்று கூறுகிறுர். கஜ்ஜல் ஹட்டிக் கணவாய் என்பது கோபிசெட்டிபாளையம் தாலூக்காவுக்கும் கொள்ளேகாலம் தாலூக்காவுக்கும் மத்தியிலுள்ள மலைப்பிராந்தியம். ஆனுல் ஸ்கந்த புரத்தைப்பற்றி வருணிக்கும் காலத்தில் நஞ்சை நிலங்களுக்கு மத்தியிலும் நதியோரமாகவும் இருப்பதாகக் கூறியுள்ளதால் அது மலைப் பிராந்தியத்தில் இருக்கமுடியாது. சில அறிஞர்கள் அது தாராபுரமோ அல்லது கரூரோ எனச் சந்தேகிக்கின்றுர்கள். ஏனெனில் கொங்கு மன்னர்கள் சோழபாண்டியர்களோடு அடிக்கடி கலந்து கொண்டவர்களாய் இருந்தபடியால் அன்னுர்களுடைய நாட்டு எல்லைகளுக்கு அடுத்தாற்போல ஸ்கந்தபுரம் இருக்கக்கூடும் என்ற ஒரு காரணத்தைக் காட்டுகிறுர்கள். கஜ்ஜல் ஹட்டியில் ஒரு பாழடைந்த கோட்டை இன்னும் இருக்கின்றது. தாராபுரத்திலும் கரூரிலும் கோட்டைகள் இருந்தன. ஆனுல் அவைகள் எவ்வளவு பழமையானது என்பதைப்பற்றிக் கூற ஆதாரங்கள் இல்லை.

மேலும் இவ்வரசன் ரெட்டி குலத்தில் தோன்றியதாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ரெட்டிகுலம் என்பது எந்த குலம் என்று தெரியவில்லை; வடக்கே தெலுங்கர்களில் ரெட்டி குலத்தார் விசேஷமாக இருக்கின்றுர்கள். ஐந்தாறு நூற்றுண்டுகளாக அவர்களில் மன்னர்களும் ராஜ கவிகளும் இருந்திருக்கிறுர்கள். அந்த குலமா என்பது ஒரு கேள்வி. ஆனுல் இந்நூலின்படி இவ்வரசன் சுமார் 20 நூற்றுண்டுகளுக்கு முந்தி இருந்திருக்கவேண்டு.

அத்தனைப் புராதன காலத்தில் தெலுங்கர்கள் பிரபலமான நிலைக்கு வந்திருக்கவில்லை. அவர்களிலும் ரெட்டி குலத்தார் பெயரையே கேட்டறியோம். தெலுங்கு மொழியும் தெளிந்த நிலை அக்காலத்தில் அடையவில்லை. ஆகவே இவ்வரசன் தெலுங்கு நாட்டு ரெட்டியாக இருந்திருக்கமுடியாது. மேலும் இந்நூலை ஆராய்ந்த சில சரித்திர அறிஞர்கள் ரெட்டி என்றபதத்தை ரட்ட என்று எழுதியிருக்கிறார்கள். ஐந்நூறு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தக்ஷணப் பீடபூமியில் அரசாண்ட இராஷ்டிர கூட நாட்டு அரசவம்சத்தை ரட்ட.குலம் என்று அழைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த அரசனும் ஒரு வேளை அப்படிப்பட்ட பண்டைய குலத்தில் பிறந்திருக்கலாம். இனி இவ்வரசன் ஸ்கந்த புரத்தில்தோன்றி கொங்கு தேசத்திற்கு அரசனாகி கிரீடம் தரித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது ஆகவே இவன் தோன்றிய வம்சம் அரச வம்சம் அல்லவென்றும். ஆனால் பின்னர் இவன் அரசன் ஆனான் என்றும் அறியலாம். ஆகவே சாதாரண குடியாக இருந்த இவன் தன்னுடைய பலத்தினால் அந்நாட்டிற்கு அரசனாகிவிட்டான் என ஊகிக்கலாம். இச்சில செய்திகளைத் தவிர இவன் எவ்வளவு ஆண்டு ஆண்டான், என்னென்ன காரியங்கள் செய்தான், முதலான விவரங்கள் ஒன்றும் சொல்லப்படவில்லை.

2. கோவிந்தராயன். இவ்வரசன் முன் சொன்ன வீரராஜ சக்கரவர்த்தியின் மகன். இவன் சூரிய வம்சத்திலே கொங்கு தேசத்து ஸ்கந்த புரத்திலே பட்டங் கட்டிக்கொண்டு தன் தகப்பனைக்காட்டிலும் மிக்கக் கீர்த்தியோடு உலகில் தனக்குச் சமானமாக ஒருவரும் இல்லை எனும்படி சந்தோஷத்துடன் அரசாண்டான் என்று கண்டிருக்கிறது. இவ்வரசனைப்பற்றிக் கூறும்போது தான் இவனுடைய வம்சம் சூரியவம்சம் எனக்கூறப்பட்டிருக்கிறது. ஆகவே ரெட்டி குலத்தார் சூரிய வம்சத்தார்கள் ஆகவேண்டும். ஒருவன் எத்தனைத் தாழ்ந்த குலத்தில் பிறந்தாலும் தன் வல்லமையால் அரசனாகிவிட்டால் அவனுக்கு ஒரு கோத்திரமும் ஒரு அரச பரம்பரையும் ஒரு வம்சமும் கற்பித்துவிடுவது நம் நாட்டாருடைய ஒரு குணம். மிகவும் பிரக்கியாதியைத் தருவதற்காக சூரிய வம்சம்

சந்திர வம்சம் என்ற இரண்டில் ஒன்றை ஏற்படுத்திவிடுவது சகஜம். ஆகவே இவ்வம்சத்திற்குச் சூரியவம்சத்தைக் கற்பித்து விட்டார்கள் போலும். இவ்வரசன் தன் தகப்பனைவிட அதிக கீர்த்தியோடு ஆண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது புதிதாக ஏற்படும் அரச பரம்பரையில் முதல் அரசனைவிட இரண்டாவது அரசன் அக்கம் பக்கத்து நாடுகளைப்பிடித்துப் பிரக்கியாதியோடு ஆளுவது உலக வழக்கம்.

3. **கிருஷ்ணராயன்.** இவன் கோவிந்தராயனுடைய மகன். இவனும் ஸ்கந்த புரத்திலே பட்டங்கட்டிக்கொண்டு தன் தகப்பனைக் காட்டிலும் நீதி சாஸ்திரப்படி நியாயம் விசாரித்து இராஜ்ஜியத்திலே இவனுக்குச் சமானம் ஒருவரும் இல்லை என்று சொல்லும்படி கீர்த்தி அடைந்து அரசாண்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவன் அரசாட்சியில் நன்றாக நீதி செலுத்தினான் என்பது மாத்திரம் பெறப்படுகிறது. இவனைப்பற்றி மற்ற விவரங்கள் தெரியவில்லை. ஆகவே இவன் போர் முதலிய செய்கைகளில் கீர்த்திபெறவில்லை என கூறலாம்.

4. **கலவல்லவராயன்.** இவன் கிருஷ்ணராயனுடைய மகன். இவனும் ஸ்கந்த புரத்தில் தன் தகப்பனைக்காட்டிலும் நீதி சாஸ்திரப்படி நியாயம் விசாரித்து அரசாண்டு மிக்க இன்பம் அனுபவித்துக் கீர்த்தி அடைந்தான் என்று கூறப்பட்டுள்ளது. இவனைப்பற்றி நீதி செலுத்தியதும் இன்பம் அனுபவித்ததும் தவிர வேறு விவரம் கிடைக்கவில்லை. இவன் கலைகளில் வல்லனாக இருந்து அவற்றின் இன்பங்களை நுகர்ந்துகொண்டே காலம் கடத்தினான்போலும்.

(தொடரும்)

—கோவைக்கிழார்.

---

திணைமாலை நூற்றைம் பத்தும் தெருண்மதிக் கணிமே தாவி;
திணைமொழி ஐந்து பத்தும் திகழ்கணஞ் சேந்த னார்; ஐந்
திணையெழு பதுமூ வாதி; திகழ்மாறன் பொறைய னார்; ஐந்
திணையைம்ப தமையச் சொற்றார்: சிறுதொகைப் பதினெண்
[தெருண்மதி—திகழ் : இவை அடைமொழிகள்.]

பண்டிதர் S. ஐயாசாமிப் பிள்ளை.

## மகாவித்வான் சந்திரசேகரம் பிள்ளை.

சற்றேறக்குறைய 70, 80 ஆண்டுகளின் முன்னர் ஒரு பெரும் புலவர் கோயமுத்தூரில் விளங்கினர். அந்தக்காலத்தில் சதர் அதாலத்து கோர்டு என்பது அரசாங்கப் பெரிய நியாயத்தலம். அதில் சதர் அமீன் என்பது பெரிய உத்தியோகம். இந்தநாள் சில்லா ஜட்ஜ் கோர்டு சிரஸ்தார் பதவிபோல உள்ளது. இந்தப் புலவர் வெறும் புலவராயில்லாமல் அந்தச் சதர் அமீன் என்ற பதவியில் உத்தியோகம் பெற்றிருந்தார். அதற்கு 100 ரூபா அளவில் சம்பளம் உண்டு. அது இந்நாளில் 1000 ரூபாயுக்குச் சமானமாம். இவர் பெரிய உத்தியோகத்தராயும் புலவராயுமிருந்ததுடன் புலவர்களையும் பாராட்டி ஆதரித்து வந்தார். அதனால் இவரிடம் பல புலவர்கள் பாட்டுப்பாடிக்கொண்டு பரிசுபெற வருவார்கள். அப்படி ஒருநாள் மாலையில் ஒரு புலவர் இவரிடம் வந்தார். பரிசுபெறச் சில பாட்டு பாடிக்கொண்டு வந்தார். (இந்த நாளில் புலவருக்குப் பரிசும் போயிற்று; புலவரும் பாட்டுப்பாடிக்கொண்டு வருவதும் போயிற்று.)

அந்தப் புலவர் பாடிக்கொண்டுவந்த ஒரு பாட்டு முழுவதும் எனக்குத் தெரியாது. அதில் ஒரு அடி:

''முதலிரு'' பதத்தை முனிந்தனள் மூன்று மொழிகரங் கூப்பினள் பிள்ளை''.........................

என்பது போன்றிருந்தது. இந்தப்பாட்டின் உள்ளுறை தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்றுது. சந்தனத்தையும் இரவையும் முனிந்து வெறுத்துத்தன் உயிரைக்காக்கும் பொருட்டு இறைவனைத் தாங்கி வரும்படி இடபத்தைக் கைகூப்பித் தொழுதுகொண்டிருப்பதாய் ஒரு நற்றாய் மொழியாக இருந்தது. இது அந்த உத்தியோகப் புலவர் பெயரையே உள்ளடக்கியதாயும் இருந்தது. பாடிய புலவருக்கு ஏதோ பரிசு கொடுத்தனுப்பிவிட்டு உத்தியோகப் புலவர் தம் நண்பர்களிடம் ''ஐயா எனக்கு இந்தப் பெரிய உத்தியோகம் இனி மாறிவிடும். வேறு தொழில்தான் நிலைக்கும்'' என்று சொன்னர். அப்படியே சில நாளில் அந்த உத்தியோகஸ்தானமே எடுபட்டுப் போய் அவருக்கு அந்த வேலையில்லாமற் போய்விட்டது. அவர்

பிறகு வக்கீலாக வந்து அந்த நீதித்தலத்திலேயே பெரும் பொருள் சம்பாதித்துப் புலவர்களையும் அடியார்களையும் ஆதரித்துக் கொண்டிருந்து சுமார் 40 வயதுக்குள் காலமானார்.

இவர் பேர்தான் தலைப்பிற்குறித்த மகாவித்வான் சந்திரசேகரம் பிள்ளை இதற்கும் முன்சொன்ன சம்பவத்திற்கும் என்ன சம்பந்தம்? பாடிய புலவர் இவரது பேரைப் பல பதங்களாகப் பிரித்து அதிலிருந்து ஷெபாட்டின் கருத்தை எடுத்துவைத்துப் பிணைத்துப் பாடினார். அதாவது சந்து + இர + சே + கரம் + பிள்ளை ஆக ஐந்து மொழிகள் சேர்ந்தது: இவற்றுள் முதல் இருபதமாவன சந்து + இர–என்பன; = சந்தனம்—இரவு = இவற்றை முனிந்தாள் தலைவி = தலைவனது பிரிவாற்றாமையினால் கூடியபோது இன்பந்தரும் சந்தனத்தையும் இராக்காலத்தை வெறுத்தாள்: மூன்றாம் மொழி சே என்பது; இடபம் = இதனைக் கரம் கூப்பினள் கைகூப்பித் தொழுந்து வருந்துகின்ற தனது உயிரைக் காப்பாற்றும் பொருட்டுக் காலகாலனைத் தன்மீது கொண்டுவிடும்படி; பிள்ளை = குழந்தை—எனதுபெண். இவ்வாறு உத்தியோகஸ்தர் பேரைப்பிரித்துத் தாய் மொழியாகத் தலைவி பிரிவாற்றாமையை உள்ளுறையாகக் கொண்டு இவர் பேரையும் கடைசியில் வைத்துப்பாடியிருந்தனர். இதில் பாட்டுக்கருத்தும் போக்கும் மிக அழகாயும் இனிமையாயும் இருந்தது. ஆனால் முதல் இருபதத்தை முனிந்தாள் என்பது, முதல் = முதலில் கிடைத்த, இரு பெரிய பதத்தை, பதவியை = முனிந்தாள் வெறுத்து ஒதுக்கினாள்: என்று ஒரு இரட்டை அர்த்தம் கூடவே உள்ளே தொனிக்கின்றது. இதுகண்டு தான் உத்தியோகப் புலவர் தனது பெரிய உத்தியோகம் சீக்கிரம் விலகிவிடும் என்று கூறியது.

வந்த புலவர் வாக்கும் கண்ட புலவர் மிக்க புலனறிநுணுக்கமும் விளங்குகின்றதன்றோ?

இவர் மகா வித்வானாயிருந்தார். சரவணப் பெருமாளையர் என்று அந்நாளில் சென்னையிற்பேர்போன பெரிய புலவரிடத்தே தான் இவர் கல்வி கற்றனர். இவர் வேறு தனியான பல நூல்களி

யற்ருவிடினும் சிவஞான சித்தியாருக்கு ஒரு இலகுவான உரை எழுதினர் என்பர். அது அச்சில் வெளிவராமலே போய்விட்டது போலும்.

இவர் மிகுந்த உதார குணமுடையவர். தமது தொழில் முறையிலே பெரும் பொருள் ஈட்டினர். ஆனல் அவைமுழுதும் பிறர்க்கு உபகரிப்பதிலேயே செலவிட்டார். அந்நாளில் கந்தசாமி ஐயர் என்ருெரு பெரியாரும் அவருடன் கார்த்திகேயத்தம்பிரான் என்ருெரு பெரியாரும் வந்து இவராற் பேராதரவு பெற்றுப் பல நாள் இவருடன் தங்கினர். இவர் சைவ சாஸ்திரத்தில் வல்லவர். யோகமும் ஞானமும் வல்லவர். இவரை இப்புலவர் பெருமான் பல நாள் தம்முடனே வைத்து ஆதரித்து இவரிடம் சைவசித்தாந்த சரித்திர பாடமும் கேட்டுக்கொண்டார். இப் பெரியார் வயது முதிர்ந்தவர் ஆயினும் முன் கோபம் உடையவர். இவரது கோபத்திற்கெல்லாம் உட்பட்டே இவர் அவரிடம் நடந்து கொண்டு ஆதரித்து வைத்துப் பாடங்கேட்டுவந்தார். அவரது கோபத்தையும் இவரது நற்குண ஒழுக்கத்தையும் காட்ட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதாவது:—மகா வித்வானும் பெரியவரும் ஒருங்கேயிருந்து உண்டனர். மகா வித்வான் மனைவியார் அன்னம் படைத்தனர். அது மிகச்சுடுகையாய்ப்பெரியவர் கையைச்சுட்டு விட்டது. அவர் கோபங்கொண்டு அதனை இலையுடன் அந்த அம்மையார் பேரில் வாரி இறைத்து விட்டனர். வித்துவான் சிறிதும் மனம்மாருமல் தனது மனைவியாரை இதனைப்பாராட்டாது பொறுத்துக்கொண்டு இன்முகமாக மீண்டும் தக்கவாறுபடைக்குமாறு வேண்டிக்கொண்டனர். அவ்வாறே அவரும் படைக்கப் பெரியார் உண்டனர் என்பதாம். இப்பெரியாரது பெருமையைக்காட்ட ஒரு விசேஷ விஷயம் நடைபெற்றது. பெரியார் தமக்கு வயது முதிர்ந்து விட்டபோதிலும் தாம் ஒரு விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும் இல்லாவிட்டால் அதற்காகத் தாம் இனி ஒரு பிறவி எடுக்கவேண்டுமென்றும் உணர்ந்து அதனை முடிப்பிக்கும்படி வித்துவானை வேண்டினர். "நான் இன்னும் இரண்டு வருடம்தான் இருப்பேன். இப்போது ஒருவிவாகம் செய்துகொள்ளவேண்டும். இல்லையேல் அதற்காக இனி ஒரு பிறவிஎடுக்க

வேண்டும். கலியாணம் செய்தபின் ஒரு மகவு பிறக்கும். அதுவும் இறந்துவிடும். என் மனைவி விதவையாகத் திருவதிகையில் சிவபணிவிடைசெய்து தனது வாழ்வைக்கழிக்க வேண்டும். அதற்காக அவளிடம் 500 ரூபாய் இப்போதே நீ கொடுத்து விடவும்வேண்டும். இத்தனையும் பெண்வீட்டாரிடம் தெரிவித்தே இவ்விவாகத்தை நீ முடித்து வைக்கவேண்டும் பெண்ணும் இன்ன இடத்தில் இருக்கிறது'' என்று தனது அரிய கர்ம ஞானத்தினல் வித்துவானிடம் ஆணையிட்டனர். அவரும் அவ்வாறே முடிப்பித்தனர். அதற்கெல்லாம் இசைந்து பெண்ணையும் ஒருவர் கொடுக்க மணமும் நிகழ்ந்தது. பெரியார் சொல்லியபடியே யாவும் நிகழ்ந்தன.

இந்தப் பெரியாரோடு கார்த்திகேயத்தம்பிரான் என்ற மற்றொரு பெரியார் உடன்வந்து வித்துவானிடம் பெரும் ஆதரவு பெற்றனர். இவரே திருவதிகை வீரட்டானத்திலே பல அரிய திருப்பணிகளைச்செய்து கள்ளி முளைத்து மூடியிருந்த அவ்வாலயத்தை வெளிப்படுத்தி அரிய பல பணிகளும் செய்தனர். அதற்காக வித்துவான் தமது கட்சிக்காரர்களில் (Clients) மிகச்செல்வவந்தராயிருந்த அவிநாசி ஒரு ஆறுமுகக் கவுண்டர் என்பவனிடம் அறிவித்துப் பதினாயிரம் ரூபாய் வரை கொடுப்பித்தார். தாமும் அனேகம் பணம் கொடுத்தார். இவர் காலஞ்சென்ற செய்தி கேள்வியுற்ற அந்தத்தம் பிரான் சுவாமிகள் மிக வருந்திப் ''பணம் காய்க்கும் மரம் பட்டுப்போயிற்று'' என்று சொல்லி வருந்தினர் என்பர்.

இவ்வித்வானுக்குத் திருச்சிற்றம்பலம் பிள்ளை சபாபதி பிள்ளை என்று இரண்டு மக்கள் உண்டு. இவரது கல்வித்திறம் இவர்களுள் மூத்தவராகிய திருச்சிற்றம்பலம் பிள்ளையிடம் மிகவும் பிரதிபலித்திருந்தது. இவ்விருமக்களும் இப்போது காலமாய் விட்டார்கள். இளைய மகனுடைய மகன் ''இவரது பேரன்'' சந்திரசேகரம் பிள்ளை இப்போது கோயமுத்தூர் சர்க்கார் விவசாயப்பண்ணையில் உத்தியோகத்திலிருக்கிறார்.

இந்த மகாவித்வான் அனேகருக்குத் தமிழ்க்கல்வி போதித்தனர். அவர்களுட் சிறந்தவர் கோயமுத்தூர் மகாவித்வான் கந்தசாமி முதலியார் என்ற எனது தந்தையாராவர். இவர் தமது ஆசிரியரிடம் கிளியைத்தூது விட்டதாகக் கொண்டு ''திருப்பேரூர்க் கிள்ளைவிடுதூது'' என்று அழகிய ஒரு பிரபந்தம் செய்துள்ளார். அதிலே தமது ஆசிரியரது பெருமைகளையும் அவர் தம்மைத் தீநெறிகளிலிருந்து விடுவித்து நல்வழி புகட்டி வழிப்படுத்திய சிறப்புகளையும் மிக அழகாக எடுத்துப்பாடியிருக்கின்றார். அவற்றை

அந்நூலிற் கண்டுகொள்க. தாம் முதலில் அந்நாளில் இந்நாட்டிற் பரவிநின்ற ஏசு மதச்சார்பிலே இச்சைவைத்துத் தம் ஆசாரியனிடம் வாதம் செய்ததையும் அவ்வாதங்களை எல்லாம் மறுத்து ஏசுமத மறுப்பும் சைவத்தாபனமுமாக அனேக காரணங்கள் காட்டித் தம்மைத் தெருட்டி யருள்புரிந்து சைவப்பற்றுள்ளவனாக ஆக்கிய வாதப்பிரதிவாதங்களும் அவற்றால் தாம் அடைந்த பலன்களும் விரிவாய் அதிற்பாடியுள்ளார்கள். அவற்றிற் சில கண்ணிகளை அடுத்த இதழிற் பதிப்பிப்போம்.

இம்மகாவித்வான் தமது இளவயதிலே[redacted]றக்குறைய 35,40 ஆண்டுகளுக்குள் காலஞ்சென்றனர். தமக்கு நேரிட்ட நோயின் சிகிச்சைக்காகப் பாலக்காட்டிற்குச் சென்றவர் அங்குத்தம் வாழ்நாளைப்பற்றி ஐயப்பட்டு உடனே கோயமுத்தூர்க்குக் கொண்டு சேர்க்கும்படித் திட்டம் செய்ய அவ்வாறே கொண்டுவரப் பெற்றவர் வரும் வழியிலே காலஞ்சென்றனர். இவ்வாறு தம்மிருப்பிடமாகிய வீட்டிலே உயிர் நீக்கப்பெறாது வழியிலே இறக்கப்பெறுதல் இவருக்கும் இவரது இருமக்களுக்கும் ஒன்றுபோலவே நிகழ்ந்தது. இதுவும் ஒரு நியதிபோலும். இவரது மூத்தமகனார் மிக்க நோய்வாய்ப்பட்டு வருந்தினபோது பழனியாண்டவரைத் தரிசிக்க வேண்டுமென்று பிடிவாதமாய் ஆணையிட்டபடி அங்குக் கொண்டுபோகப் பெற்றவர் அங்கிருந்து வரும் வழியில் தாராபுரத்திலே இவ்வுலகை நீத்தார். இவரது இளையமகனார் கோயமுத்தூர் அரசாங்க வைத்திய சாலையிலிருந்து வீட்டிற்கு வரும் வழியில் உயிர்நீத்தார். இவர்களெல்லாம் ஒன்று போலவே இளவயதில் (40 ஆண்டுகளுக்குள் காலஞ்சென்றவர்களாம்.

"காடோ செடியோ கடற்புறமோ கனமே மிகுந்த
வீடோ புறத்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்"

என்று பட்டினத்தடிகள் அருளியது இவர்கள் திறத்தில் மிகப் பொருந்தியதாம்.

கொங்குநாட்டின் தமிழ் மணத்திற்குக் காரணராயிருந்த இம் மகாவித்வானது வரலாற்றிலே மேற்கண்ட சில செய்திகள் அவர் மகனாராகிய எனது ஆசிரியரிடம் நான் பாடங்கேட்டபோது அவ்வப்போது கேட்டவற்றை என் நினைவிலிருந்தபடி இங்கு குறித்தேன்.

C. K. சுப்பிரமணிய முதலியார்.

(79-ம் பக்கம் தொடர்ச்சி)

வயிரியர் என்னுஞ் சொல்லும் கூத்தரைக் குறிக்க முற்காலத்தில் வழக்காற்றில் இருந்து வந்ததாகத் தெரிகிறது.

விழவின் ஆடும் வயிரியர் மடிய

(மதுரைக் காஞ்சி: 628)

[திருவிழாக் காலத்தில் கூத்தாடுங் கூத்தர் துயில் கொள்ளுக]

பாணர் வருக பாட்டியர் வருக
யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக

(மதுரைக் காஞ்சி: 49—50)

[கவியாகிய புதுவருவாயினையுடைய புலவரொடு பாணரும், பாணிச்சியரும், கூத்தரும் வருக]

நோனுச் செருவின் வலம்படு நோன்றாள்
மான விறல்வேள் வயிரிய மெனினே

(மலைபடு கடாம்: 163—164)

[பொறுமல் பகைவரைப் பொரும் போரினையும், வெற்றியுண்டாகும் முயற்சியினையும், மானத்தையும், வெற்றியினையும் உடைய நன்னனுடைய கூத்தர்கள் யாம் என்று கூறுவீராயின்]

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவின் நெடியோன்

(புறநானூறு—9)

[சிவந்த நீர்மையையுடைய பசும்பொன்னைக் கூத்தருக்கு வழங்கியவனும், கடல் தெய்வத்துக்குக் கொடுத்த விழாவினையுடையவனும் ஆகிய பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாகிய நெடியோன்]

பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார்* முழவின் வயிரியர் அகேக்கிய
இன்மை தீர்க்கும் குடிப்பிறந் தோயே

(புறநானூறு—164)

[அடுக்கப்பெற்ற நிறை நரம்புள்ள புதிய தோலால் போர்க்கப்பட்டுள்ள சிறந்த யாழினையும், ஒலி நிரம்பிய முழவினையும் உடைய கூத்தர்களது வறுமையை நீக்கும் குடியிற் பிறந்தவனே)

இவற்றால் கூத்தருக்கு வயிரியர் என்னும் பெயரையும் இட்டு வழங்கினர். என்பதும், திருவிழாக்காலங்களில் கூத்தாடுதல் ஓர் வழக்கென்பதும், அரசர்கள் கூத்தரை அழைத்துப் பரிசில் வழங்கினர் என்பதும், அரசவையின் அங்கமாகக் கூத்தரும் பொலிந்திருந்தனராக, அக்கூத்தர் பிறநாடுகளிற் சென்று தாம் இன்ன மன்னனது கூத்தர் என அறிமுகம் செய்துகொள்ளுவதும், கூத்தர் யாழ், தண்ணுமை முதலிய வாச்சியக் கருவிகளைத் துணையாகக் கொண்டிருந்தனர் என்பதும் வெளிப்படையாகப் புலப்படுகின்றன.

இனிக் கண்ணுளர் என்னும் மற்றொரு சொல் கூத்தரைக் குறிக்கப்பல நூல்களிலுங் காண்கின்றது. இச்சொல்லுக்கும் உரையாசிரியர் கூத்தர் எனப் பொருள் கண்டுள்ளார். அகராதிகளில், கம்மாளர், சித்திரகாரர், சாந்திக்கூத்தர், மதங்கர், நாடகர், தொழில் வல்லுநர், கைதேர்ந்தவர், பொய்க்கோலமணிந்து கூத்தாடுநர் எனப் பல பொருள்கள் காண்கின்றன. பின் வருவன அச்சொல் வழங்கிய பழம் பாட்டடிகள்:—

புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ

(மலைபடுகடாம்: 49—50)

---

*மண் ஆர் முழவு=மண்ணினால் பண்ணிய முழவு என்லும்ஆம். மிருதங்கம் என்னும் சொல்லுக்கு மண்ணால்செய்த முழவு என்பது பொருள் என்றும், முற்காலத்தில் மண்முழவுதான் இருந்ததென்றும் கூறுவர். மிருத்—மண். மிருத்சகடியை நோக்குக.

[வழிவந்த வருத்தத்தைக் கைவிட்டிருந்தவரும், அறிவினையுடைய வரும், அணிகலன்களைப் பெறுபவருமாகிய கூத்தராது சுற்றத்திற் குத் தலைவனே]

அடுபோர் ஆனா ஆதன் ஓரி
மாரி வண்கொடை காணிய நன்றுஞ்
சென்றது மன்எம் கண்ணுளர் கடும்பே
பனிநீர்ப் பூவா மணிமிடை குவளை
வால்நார்த் தொடுத்த கண்ணியுங் கலனும்
யானை இனத்தொடு பெற்றனர் நீங்கிப்
பசியார் ஆகல் மாறுகொல் விசிப்பிணிக்
கூடுகொள் இன்னியங் கறங்க
ஆடலும் ஒல்லார் பாடலும் மறந்தே

(புறநானூறு—153)

[கொல்லும் போரைச் செய்யாத ஆதன் ஓரியது மழைபோலும் வள்ளன்மையையுடைய கொடையைக் காண்டற்கு எனது கூத்தச் சுற்றத்தார் மிகுதியாகச் சென்றனர். குளிர்ந்த நீரின் கண் மலராத மணிமிடைந்த குவளைப்பூவை வெள்ளிய நாரினால் தொடுத்த மாலையினையும், மற்ற அணிகலன்களையும், யானைக் கூட்டத்தோடும் (அக்கூத்தர்கள்) பெற்றனராய், (அவ்விடம் விட்டு) நீங்கிப் பசி அறியாதவராய், மாறிமாறி வாரால் வலித்துப் பிணித்த இனிய வாச்சியக் கருவிகளை ஒலித்தலும் ஆடுதலும் மாட்டார்]

[குறிப்பு:—கூத்தர்க்கு மன்னன் கொடுத்த அணிகலன்களும் யானை களும் மிக்க அளவினவாதலால், வறுமை நீங்கிய அவர் மூட்டை கட்டிப்போட்ட வாச்சியக் கருவிகளை வெளியிலெடுத்து இயக்கிப் பாடி ஆடாதொழிந்தனர் என்பதாம்]

மேற்கூறிய கண்ணுளர் ஆடலும் பாடலும் வல்லுநர் எனவே அவர் அவிநயக் கூத்தராதல் நாடகக் கூத்தராதல் கூடும்.

இதனளவுங் காட்டிய மேற்கோள்களினின்றும், அக்காலத்து அரசராயினோர் ஆடல் பாடலை விருப்பொடு நயந்ததும், அவை வல்லார்க்கு வறுமையகலப் பரிசில் வழங்கியதும், கூத்தர்தம் சுற்றத்

தொடு ஊர்தோறுஞ்சென்று தங்தொழில் காட்டி வந்ததும் ஆகிய குறிப்புகள் கிடைக்கின்றன. கூத்தர் என்பார் ஒரு சாரார் பழங் காலத்தில் பலவிடத்தும் இருந்தனர் என்பதும், அவர் ஆடல் பாடலைத் தொழில் முறையாகப் போற்றி ஆங்காங்குசென்று பாடி நடித்துப் பலன்பெற்று வந்தனர் என்பதும் நன்கு புலப்படுகின்றன.

கூத்தர்களுக்கு வழங்கிய பல பெயர்களைப்பற்றிக் கூறுமுறையானே, பொருநர், விறலியர், சாக்கியர் முதலிய பெயர்களும் பலவிடத்துங் காணப்பெறுதலால் இவைகளைப்பற்றியும் சிறிது ஈண்டுக் கூறுவது வேண்டப்படுவதாகும்.

பொருநர் வேடம் புனைந்து கூத்தாடுமவரே யாவர். இவர் எவ்வெத்தொழில் வல்லுநர் என்பது, தொல்காப்பியம் புறத்திணையியல் 36-வது சூத்திரத்து நச்சினர்க்கினியருரையில் தொகுக்கப்பட்டுள்ளது. அஃது வருமாறு:—

“அப்பொருநரும், ஏர்க்களம் பாடுநரும்,
போர்க்களம் பாடுநரும், பரணிபாடுநரும்
எனப் பலராம்”

இவ்வுரையாலும் பிறவற்றாலும், பொருநர் என்பார் பைங்கூழ் விளைந்த காலை அதனை உள்ளிட்டுப் பாடுவதும் போர்க்களத்தில் வெற்றி பெற்ற மன்னரைப் புகழ்ந்து பாடுவதும், பரணிபாடுவதும் ஆகப் பலசிறப்பட்ட தொழிலைக் கைக்கொண்டிருந்தனர் என்று தெரிகிறது.
இவர்களாடுங் கூத்து, விநோதக்கூத்துள் ஒன்றாகிய வென்றிக்கூத்தெனத் தெரிகிறது. அரசனது வெற்றியைக் குறித்து ஆடுங்கூத்து வென்றிக் கூத்தாம். அது நகைச்சுவை தழுவியது.

நச்சினர்க்கினியர் உரைக்குறிப்பினின்றும் இப்பொருநர் நாடகக்கூத்தரல்லர் எனத் தெரிகின்றது.

விறலியர் என்பார் கூத்தருள் மற்றொரு சாரார். இவர் ஆடுங் கூத்துக்கு விறலிக்கூத்து என்று பெயர். இவர் மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கமடுத்தல், வியர்த்தல், தோற்றம், களித்

தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதை என்னும் பத்து வகை விறலையும் காட்டவல்லவர். விறல் எனப்படுவது சுவையுணர்வு உள்ளத்து நிகழ்ந்தவழித் தோன்றும் மெய்ப்பாடு (உடம்பின் கண்) தோன்றும் வேறுபாடு: Transfiguration of Countenance.) விறலிக்கூத்து அவிநயத்துள் அடங்குமாதலால் அது நாடகக் கூத்தாகாது.

மண்ணமை முழவின் பண்ணமை சீறியாழ்
ஒண்ணுதல் விறலியர் பாணி தூங்க
மதந்தபு ஞமலி நாவின் அன்ன
துளங்கியல் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொள் தோகையில் க்துப்பிகுத் தசைஇ
இலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்
திலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்ற

(மடுபடுகடாம்: 42—46)

மருதம்பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தோன்றிக்
கடவ தறிந்த இன்குறல் விறலியர்

(மலைபடுகடாம்: 535—36)

உரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகல்பெயல் துளியின் மின்னு நிமிர்ந் தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
தொடையமை மாலை விறலியர் மலைய

இவை பொருநர் எனுஞ் சொல் வழங்கிய சிலமேற்கோள்கள். இவற்றுள் ஒண்ணுதல், இலங்குவளை, இன்குரல், கதுப்பு முதலிய அடைகளால் விறலியர் என்பார் பெண்பாலரே யாவர் என அறியலாகும்.

(தொடரும்)

பண்டிதர், S. ஐயாசாமிப் பிள்ளை.

# சமயப் பகுதி.

## ஆனந்தம்.

---

மக்கள் மாக்கள் நிலையிலிருந்து விடுபட்டதின் அறிகுறியே சமயவளர்ச்சியாகும். மனிதனின் அறிவு வளர்ச்சியே பலகோடி சமயத்தைத் தோன்றச் செய்தது. பல்லூழி காலமாகத் திகழ்ந்து வரும் பண்டைச் சமயமாகிய இந்து சமயம் ஓர் மகாசமுத்திரம் போன்றது. பிறசமயங்கள் மக்கட் சமுதாயத்திற்கு இன்றியமையா சிற்சில அம்சங்களை மட்டும் வற்புறுத்தியிருக்க நம் இந்துசமயத்தில் நாத்திகம் உள்பட பிற எல்லாச் சமய அம்சங்களும் அடங்கியிருக்கக் காணலாம்.

பௌத்தமதம் ஜீவகாருண்யத்தை அடிப்படையாகக் கொண்டது. தன் கிறிஸ்துமதம் பாவ மன்னிப்பையும், மனிதன் வயமிழத்தலையும் கூறு நிற்கும். மகமதிய மதம் அகில உலக சகோதரத்தத்துவத்தை நிலைநாட்டும். ஜொராஸ்டிரியர் மதம் அக்னியின் பெருமையாகிய பொருள்களைச் சுத்தம்படுத்தும் தன்மையைப்பற்றிப் பேசும். இத்தகைய பல்வேறு அம்சங்களையும் நம் சநாதன சமயத்தில் காணலாம்.

நம் நாட்டில் இற்றைக்கு சுமார் 75 ஆண்டுகட்கு முன்னர் இருந்த நிலையைச் சற்று கவனிப்போம். கிறிஸ்துவப்பாதிரிமார்கள் விக்கிரக ஆராதனையையும் வெளிச் சடங்குகளையும், நம்மெய்ஞானச் செல்வர்களாகிய சித்தர்களின் வாக்குகளைக்கொண்டு இழித்துக்கூறி தம் மதத்தைப் பரப்பலாயினர். இந்து மதத்தின் உண்மைத் தத்துவங்களை அறியாது வெளிச்சடங்குகளை மட்டும் செய்துவந்த நம்மக்கள் எளிதில் இம்மாயவலையில் சிக்க நேர்ந்தது. இவ்வாறு காட்டுத் தீப்போல் தங்கள் மதத்தைப் பரப்பி வந்த கிறிஸ்தவப்பாதிரிகளுக்கு அனிபெசன்ட் அம்மையாரும் அவருடைய பிரம்ம ஞான சங்கமும் ஓர் தடையாக நேர்ந்தது. பிரம்மஞான சங்கத்தார் இந்து மதச்சடங்குகளின் அந்தா அர்த்தங்களையும், உள் புதைந்துள்ள விஞ்ஞான (Scientific Truths) உண்மைகளையும் மேற்றிசை அறிஞர்களின் முறைகளைப் பின்பற்றி வெளியாக்கலானார்கள். இவ்வம்மையாரும், இம்பிரம்மஞான சங்கத்தாரும் நம் இந்துசமயத்திற்கு ஆற்றியுள்ள தொண்டின் பெருமையை யாரே கணக்கிட வல்லார்.

அன்னிபெசன்ட் அம்மையாரின் மேற்பார்வையில் வளர்ந்து வந்து அவரால் உலக குரு எனப்போற்றப்பட்ட J. கிருஷ்ண மூர்த்தி ஓர் அரிய தத்துவஞானியாவார். இப்பெரியார் நம் சித்தர்கள் பரம்பரையில் ஒருவர் எனலாம். இப்பெரியாரைப் போன்றூர் உலகில் அடிக்கடி தோன்றுவதில்லை. நூற்றூண்டிற்கு ஒருவர் தோன்றுவது அரிது. நம் பண்டைச் சித்தர்களின் பாடல்களுக்கு வியாக்ஞானம் வேண்டும் என்றூல் J. கிருஷ்ணஜியின் ஆங்கிலப் பிரசங்களில்தான் விரிவாய்க் காணலாம் இவரின் தத்துவ விளக்கங்களே ஓர் ஒப்பற்ற தனித்தூய்மை பெற்றுத்திகழும் நந்தமிழ் நாட்டார் கிருஷ்ணஜியின் அரிய உபதேசங்களே அறியவேண்டுவது அவசியம். நம் செந்நெறிச் செல்வராய நால்வர்களும், தாயுமானூர், பட்டினத்தார் முதலிய பெருந்தகையாளரும் அவரவர்கள் காலத்து நாகரீகத்திற்கேற்ப தாங்கள் அநுபவித்த பேரின்பவாழ்க்கையின் உண்மைகளே வெளியிட்டு சமயபோதனே செய்தார்கள். கிருஷ்ணஜியும் தற்கால அறிவியல் நாகரீக முறையை உட்கொண்டு பண்டைத் தத்துவங்களே, உண்மைத் தத்துவங்களே, புதியமுறையில் அறிவிற்கும் அறிவியல் வாதிகளுக்கும் ஏற்கக்கூடிய வகையில் மக்கள் உய்தல் பொருட்டு வெளியாக்கி வருகின்றூர்கள் நம்நாயன்மார்கள் உண்மை சரிதங்களும் அரிச்சந்திரன் துருவன் போன்ற சீவன் முத்தர்கள் சரிதங்களும் கட்டுக்கதை என கருதுவோர்களுக்கு கிருஷ்ணஜியின் உபதேசங்கள் உண்மையை விளக்கும் தூண்டுகோலாகும். சுருங்கக் கூறுமிடத்து உயிரற்ற கதைகளாகக் கருதப்பட்டவைகளே உயிர் பெற்று விளங்குமாறு கிருஷ்ணஜியின் தத்துவபோதனே செய்கிறது. இவரின் தத்துவ உண்மைகளே ஊடுருவி அறியாதார் இவரை நாத்திகர் எனவும், அழித்தல் வேலேக்காரர் எனவும் கூறுவர். ஆத்ம விசாரணேத் துறையில் பழகியவர்க்கே உண்மை புலப்படும்.

மேனுட்டாரும் பிறரும் இவரைக் கணக்கற்ற கேள்விகள் கேட்டுள்ளார்கள். இக்கேள்விகளில் சிலவற்றையும் அவைகளுக்கு இவர் அளித்துள்ள விடைகளும் அறிவிற்கு ஓர் நல்விருந்தாகும் ஆகையால் அவைகளில் சிலவற்றை ஈண்டு விளக்குவாம்.

கேள்வி:— தனிமனிதனின் பிரச்னேயே உலகப்பிரச்னே எனக்கூறுகிறீர்கள். ஆனந்தத்தைப் பற்றியும் விடுதலே (வீடு) யைப் பற்றியும் பேசுகிறீர்கள்; இக் கொள்கைகள் தனி ஒருவனின் இலாபத்திற்கும், சுய நலத்திற்கும், சோம்பேறித்தனத்திற்கும் இடங் கொடுக்கும் எனப்பலரால் விவாதிக்கப்படுகிறது. மக்கள் தங்களுடைய மதசம்மந்தமான வேலேகளே விட்டுவிட வேண்டும் என்று தாங்கள் உண்மையாய் நம்புகிறீர்களாக என்பதை அன்புடன்

விளக்கவேண்டும்? [பிரபஞ்ச வேலைகளில் இருந்து விடுபட்டு ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே பாடுபட்டு பேரின்ப வாழ்வு அடையவேண்டும் எனவும் ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே உண்மை மார்கத்தை அறிந்தால் உலகமே உண்மையை அறிந்ததாகும் எனக்கூறியதை ஒட்டி இவ்வினு எழுந்ததாகும்.]

**விடை:—** யாராவது ஒருவர் உங்களுடைய வேலைகளை விட்டுவிடும்படி உங்களைச் செய்வார்களாகில் அச்செய்கை பலனளிக்காது. [அதாவது பிறர் ஒருவனின் கட்டாயத்திற்காக தாங்கள் செய்வது இன்னது எனத்தெரிந்து கொள்ளமால் நடப்பது பலன் அளிக்காது. பிறர் ஒருவரின் சொல்லைக்கேட்டு, உண்மையை அறியாமல் நடப்பதால், நடந்தவர்களும், நடக்கும்படி செய்தவர்களும் யாதொரு பிரயோஜனத்தையும் அடைந்தவர்கள் ஆகார்கள்.] நீங்களே உங்கள் வாழ்க்கையால் உண்மைக்கருத்துக்களை அறிந்து, உண்மையான பேரறிவை சம்பாதித்துக் கொண்டால் ஒழிய உலகத்திலுள்ள ஏனையோருக்கு அவர்கள் வாழ்க்கையாள் உண்மை லக்ஷியத்தை அறிந்து கொள்ள உதவி செய்யமுடியாது. இதை நான் நன்கு அறிந்தே கூறுகிறேன். பெரும்பாலான மக்கள் தங்களைத் தாங்களே அறிந்து கொள்ளாமல் தாங்கள் இருக்கும் குறுகிய மதக்கூண்டுக்குள் மற்றவர்களையும் சேர்க்கவேண்டும் எனப் பாடுபட்டு வேலைசெய்கிறார்கள்.

ஹிந்து மதத்தார் தங்கள் கூடேசிறந்தது என்கிறார்கள். கிறிஸ்துவர் தங்களதே மேலானது என்கிறார்கள் ஏனையரும் தங்கள் தங்கள் கூடே சிறந்ததென்று எதிர் வழக்காடி மக்களைக்கட்டுப்படுத்தாநிற்கின்றனர். உங்களின் குறிக்கோள் மக்களை இக்கட்டுப்பாட்டுகளிலிருந்து விடுபடச்செய்வதாக இருக்க வேண்டும் (வீடு; விடுதலைபெருவதற்கு கட்டுப்பாடுகள் இடையூறுகாதவாறு இருத்தல் வேண்டும்.) இம்மாதிரி செய்வதற்கு தன்மை மற்ற பரிசுத்தமுள்ள வாழ்க்கை நிலை உடையவர்களாய் இருக்கவேண்டும். பெரும்பாலான மக்களின் வாழ்க்கை அவர்களுடைய எண்ணங்களும் உணர்ச்சிகளும் மாயையின் கட்டுபாடினின்றும் விலகியவைகளாயும் தன்னலமற்றதாயும் இருப்பதில்லை.

(தொடரும்.)

S. நடராஜன், B. A.

# ஆராய்ச்சிப் பகுதி.

## புதுவை ஆநந்தரங்கப் பிள்ளை.

(60-ம் பக்கத் தொடர்ச்சி)

பரதத்தில் வல்லுநளான அழகிய கணிகையொருத்தி யாடிய காலத்தில், அவள் செய்யும் நடனத்திலே கண்ணுங்கருத்துமாக இராமகவிராயர் இருந்தபொழுது ரங்கப்பிள்ளை அவரைப்பார்த்து ஏதோ பேசினன். வேற்று ஞாபகமாக இருந்ததால் கவிராயர் கவனிக்கவில்லை. அப்பொழுது பிள்ளை அவரை நோக்கிக், "கவிராயருக்குக் கணிகையை அணையக்கருத்துப்போலும்" என்று கூறினன். அப்பொழுது கவிராயர் கூறியது:

"மூவொன்ப தென்பதிலோர் நாளில்லை மொய்வனத்திற்
றூவும் தனிமிருகந் தானில்லை நேரே
வளையா நடையில்லை வாரிறுக விம்மும்
முலை யானை யான் முயங்குதற்கு."

[27 நாளில் ஓர்நாள்: அத்தம். வனத்திற்றூவும் மிருகம்: வேங்கை. வளையாநடை: செங்கோல். அத்தம், வேங்கை, செங்கோல் இவை பொன்னுக்குப் பரியாயப் பெயர்கள்.]

ஆநந்தரங்கப் பிள்ளைக்கு மூத்த பிள்ளையாகப் பிறந்த அண்ணாசாமிக்கு ஒருவயது நிறைந்த நாளில் ஆண்டு நிறைவுவிழா நிகழ்ந்தது. அதற்குப் பல நாடுகளிலிருந்து பல பிரபுக்கள் வந்திருந்தனர். அன்றிரவு சதிர்க்கச்சேரி நடந்தது. அவ்வமயம் ரங்கப்பிள்ளையின் நண்பனும் மிக்க செல்வம் படைத்த குஜராத்தி வியாபாரியுமாகிய ஜம்புதாஸ் என்பவன் வந்திருந்தான். அவன் குழந்தைக்குப் பிறந்தநாள் நன்கொடையாக ஒரு தங்கத் தட்டத்தில் நிறைய மோகராப் பொற்காசுகளை வைத்துக் குழந்தையைத் தன் கையிலெடுத்துச் சீராட்டி முத்தங்கொடுத்து அதன் கையில் மோகராத் தட்டத்தைக் கொடுத்தனன். அதை யிருகையாலும் குழந்தை தூக்கமுடியாமல் தூக்கிச்சென்று ரங்கப்பிள்ளை மடியில் ஏறியுட்கார்ந்து தட்டத்தை எதிரில் வைத்துக்கொண்டிருந்தது. அப்பொழுது ரங்கப்பிள்ளையின் முன்னிலையில் ஆடிக்கொண்டிருந்த கணிகை தான் பரதஞ் செய்பு

முறையில் முன்னும் பின்னுஞ் சதி பெயர்த்த வண்ணம் நடந்து கொண்டு ரங்கப்பிள்ளையை நோக்கிக் கையைக் கையை நீட்டி அபிநயம் புரிந்துகொண்டிருந்தனள். இதைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்த குழந்தை, கணிகை கையைக் கையை நீட்டிக்கொண்டு வருவது தன்னெதிரிலுள்ள தங்கத் தட்டத்தைக் கொடுக்குமாறு தன்னைக் கேட்பதாகச் சருதி, மெதுவாக ரங்கப்பிள்ளையின் மடியிலிருந்து எழுந்து நின்று மோகராவுடன் தங்கத் தட்டத்தை இரு கைகளாலுமெடுத்து அவளை நோக்கி நீட்டிற்று. அவ்வளவு மிகுந்த மோகராக்களுடன் தங்கத் தட்டத்தை வாங்கிக்கொள்ள அஞ்சி அக் கணிகை அசைவற நின்றுவிட்டாள். குழந்தை தட்டத்தைத் தூக்கி நீட்டிய வண்ணம் நின்று கொண்டிருந்தது. அவ்வமயம், ரங்கப்பிள்ளை அக்கணிகையைப் பார்த்து, "ஏ மூதேவி, உனக்கு அதிருஷ்ட காலம் வந்து மிக்கபொருள் கிடைக்கிற காலத்தில் அதை வாங்காமல் ஏன் பின் வாங்குகிறாய்? உடனே வாங்கு, குழந்தை எத்தனை நாழிகை யிப்படி நிற்கும்?" என்று கடிந்து சொல்லினன். உடனே அவள் அத்தட்டத்தைப் பெற்றுக்கொண்டு வணங்கினள். அவ்வமயம் அங்கு வந்திருந்த மதுரகவிராயர் கூறிய செய்யுள்:

"கார்க்கரனா நந்தரங்க விஜய கற்ப
கத்தருவில் முளைத்தெழுந்த கன்றா மென்றே
பார்க்கவந்த ஜம்புதா செடுத்துக் கையாற்
பக்ஷமுடன் முத்தாடிப் பரிவா யீந்த
சீர்க்கநகந் தனைவாங்கிப் பண்கள் பாடும்
தேனனையாட் கீந்துமிகு திறமே பூண்ட
நாற்கவிஞர் புகழண்ணா சாமி யென்போன்
நடைகற்கு முன்னமே கொடைகற் றானே."

[கார்க்கரன்—மேகம்போலக் கொடுக்குங் கையான்.]

ஆநந்தரங்கப்பிள்ளையின் இரண்டாவது குமாரனாகிய திருவெங்கடம்பிள்ளைக்கு விவாகமானபொழுது, மணமகனும் மணமகளும் ஊசலிலமர்ந்தாடிய காலத்தில், மதுர கவிராயர் பாடியது:

" சோதிமதிக் குடைகவரி யால வட்டம்
துவசமவு தாகிரிபே ரிகைள் சட்டம்
கோதில்பசுஞ் சிவிகையம் பாரித் திட்டம்
குமாரபா ணங்கள்வஜீ ரென்னும் பட்டம்
நீதியோடு நிஜாமலிகான் அளிக்கப் பெற்று
நிலைகொளுமா நந்தரங்க ராயர் வாழ்வே
மேதினியோர் துதிக்கும்வஜா ராத ராய
விஜயதிரு வேங்கடமா லாடூ ளூசல்."

[மதிக்குடை—மதிபோலுங்குடை. அவுதாகிரி—அம்பாரிவைத்த யானை.] இச்செய்யுளால் ஆநந்தரங்கனுக்குக் குமாரபாணங்கள் என்னும் பட்டமொன்றுண்டென்பது தெரிகிறது.

மேற்சொல்லிய திருவேங்கடம்பிள்ளைக்குப் பெண்குழந்தை பிறந்தது அதற்கு ஒரு வயதாக, அப்பொழுது நிகழ்த்திய ஆண்டு விழாவில், மதுரகவிராயர் பாடியது:

"செஞ்சிநக ரார்க்காடு கன்னூர் கடப்பைமுகில்
சேர்ந்த வெங்கடகிரிமைசூர்
செகநாத புரிகாசி விஜயா புரங்கதிர்ச்
செம்பொன்மதில் சூழ்ந்ததில்லி
தஞ்சைநகர் தென்மதுரை நெல்வேலி வெண்டிசைத்
தண்குமரி மலையாளமும்
தனித்தனி புரக்குமுடி மன்னவரெ லாமலர்த்
தாமரைச் செங்கைகூப்பி
யஞ்சலிசெய் தேபணியு மரசாட்சி புரிவிஜய
வாநந்த ரங்கராயன்
அருள்புதல்வ னும்விஜய திருவேங்க டக்குரிசில்
அகமகிழ்ந் தினிதளித்த
வஞ்சியே விஞ்சுவந கிஞ்சுக மதிக்குமிதழ்
மணிவாயின் முத்தமருளே
மங்கலஞ் சேர்வதன மங்கைநா யகவல்லி
மணிவாயின் முத்தமருளே."

[வநகிஞ்சுகம்—முள்ளிலவமலர்.]

இனி ஆநந்தரங்கன் கோவையைப்பற்றிச் சில வரைந்து இக் கட்டுரையை நிறுத்துவல்.

இக்கோவையை எழுதின புலவர் இலக்கண விளக்கமெழுதிய திருவாரூர் வைத்தியநாத நாவலர் இரண்டாவது குமாரராகிய தியாக ராஜதேசிகர் என்பவர். நூலின் முதலில், 'வஜாரத விஜயவாநந்த ரங்கராயர்மீது பாடிய கோவைத்தமிழ்ப் பிரபந்தம்' என்று எழுதப் பெற்றுள்ளது. அதன் கீழ்,

'வஜாரத விஜயாநந்தரங்கேபதே
பிராஞ்சு ராஜந்நியதர்சிய சாசனம்
லோஹசாசனம்,'

என்று வரையப்பட்டுள்ளது.

அதன் பின்னர், "திருவாரூரிலிருக்கும் இலக்கண விளக்கம் செய்த வைத்தியநாத தேசிகர் குமாரர் தியாகராய தேசிகர் சித்தார்த்தி-ஸூ ஆவணி-மீ 15-உ சுக்கிரவாரதினம், பிரம்பூர் மகா-ா-ா-ஸ்ரீ பிள்ளையவர்கள் வஜாரத விஜய வாநந்தரங்கப்பிள்ளை மேற் கோவைப் பிரபந்தம் பாட ஆரம்பித்து யுவ-ஸூ ஆவணி-மீ 3-உ நிறைவேறி அரங்கேற்றுபடி செய்தது"

என்ற வாக்கியம் காணப்படுகின்றது. இதனை நோக்குமிடத்து இந்நூல் பதினாறு வருட காலத்தில் எழுதி அரங்கேற்றப்பட்டுள்ளது. இதனால், உயர்ந்தது மாதம் ஒரு முறையோ அன்றி இரு முறையோ இக்கோவையில் ஒவ்வொரு துறை கூறிப்பிரசங்கம் செய்யப்பெற்று அரங்கேறி முடிந்ததென்று ஊகிக்க இடமுண்டாகின்றது இந்தப் பதினாறு வருடகாலமும் ரங்கப் பிள்ளையின் ஆதரவிற் புலவரிருந்தனரென்பதும் புலனும்.

இன்னும் இக்கோவைப்பிரபந்த அரங்கேற்ற விஷயமாகப் பல இடையூறுகள் இருந்தன வென்பதூஉம் தெரியவரும் ஆநந்தரங்கப் பிள்ளையின் அந்தரங்க காரியதரிசியும் மிக்க சாமர்த்திய புத்திமானுமான முத்தையன் என்பவன் மிகுந்த செல்வாக்குடையவனாக இருந்தான். பெரும்பாலும் அவன் சொல்வழி ரங்கப் பிள்ளையும் நின்றனன். இவன் வழிவிட்டாலன்றிக் கோவைப் பிரசங்கம் நடைபெறா தென்பதை யுணர்ந்த தியாகராய தேசிகர் அவனது உதவியைப் பெறுமாறு அவனை நயந்துகொள்ளக் கருதியே அவன்மேற் பின்வரும் பாடலை யெழுதினதாகத் தெரிகிறது.

"பத்தைய னென்று தமிழ்ப் பாப்புலவர் மெச்சவரும்
முத்தையா கோவை மொழிவிளங்க—வித்தகநல்
லானந்த ரங்கை யனுக்குரிய வன்புவைத்துத்
தானந்த ரங்கமுறச் சாற்று."

இக்கோவை சரியாக 400 கட்டளைக் கலித்துறைகளே யடங்கியுள்ளது. துறைகளின் பெயர்களும் வைப்புமுறையும் ஆசிரியர் தம் பிதா எழுதிய இலக்கண விளக்க முறையையொரு சிறிதும் தவறாது பின்பற்றியுள்ளது. பழைய சங்கநூற் கருத்துக்கள் பலவிடத்துங் காணக் கிடக்கின்றமையானும் எதுகை மோனை நயங்களோடு சிறிதும் இடர்ப்படாத இனிய செந்தமிழ் நடையில் இப்பாக்கள் அமைந்திருத்தலானும் இதன் ஆசிரியர் இலக்கண இலக்கியங்களில் நல்ல வன்மை சான்ற புலவரென்பது போதரும்.

(தொடரும்.)

ந. பலராம ஐயர், கோயமுத்தூர்.

# குன்றுதோருடல்

## குருடிமலை.

(89-ம் பக்கம் தொடர்ச்சி)

திருத்துடிசைப் புராணத்தில் இம்மலையைப்பற்றி ஒரு சருக்கமும் இம்மலையில் பூஜை செய்து முக்தி அடைந்த குருவரிஷியின் சரிதத்தைப்பற்றிய ஒரு சருக்கமும் இருக்கின்றன. அவைகளில் கண்ட செய்திகள் நமது தமிழில் உள்ள ஏனைய புராணக் கூற்றுகளைப்போன்றவையே. ஆகவே அவைகளைப்பற்றி சிறிதுச் சுருக்கமாகவே எழுதுவோம்.

குருடிமலைக்குக் கிழக்கே 4 மைல் தூரத்திலுள்ளது துடியலூர் என்ற ஊர். இது கோவைக்கு வடக்கே 6 மைலிலுள்ளது. கோவைக்கு அடுத்த இருப்புப்பாதை நிலையமும் இங்கே உண்டு. இவ்வூரில் ஒரு புராதனமான சிவாலயம் இருக்கின்றது. இவ்வாலயத்தைச் சுற்றி தென்னந்தோப்புகள் இருக்கின்றன. குருடி மலையிலிருந்து ஓடிவரும் பள்ளம் இவ்வாலயத்திற்கருகே செல்வதால் இவ்வூரைச் சுற்றியும் செழிப்பாக இருக்கும். தோட்டச் சாகுவளியும் வெகு செழிப்பாக இருக்கும்.

இவ்வளவு செழிப்பான ஊரில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியின் பெயர் விருந்தீசுவரர். சுந்தரமூர்த்திகள் இவ்வாலயத்திற்கு விஜயஞ் செய்த காலத்தில் ஈரக்கீரையோடு விருந்திட்டதினால் சுவாமிக்கு விருந்தீசுவரர் என்று பெயர் வந்ததாகப் புராணம் கூறிகின்றது. இத்துடியலூரை துடிசை என்ற குறுக்குப் பெயரால் புராண ஆசிரியர் குறித்திருக்கின்றார். ஆகவே இவ்வூர் புராணத்திற்கு திருத்துடிசைப் புராணம் எனப்பெயர் எற்பட்டது.

புராணத்தில் நாட்டுச் சருக்கத்தில் கொங்கு நாட்டின் வருணனையை எடுத்தாண்டிருக்கின்றார். பிறகு கிரிச்சருக்கத்தில் கொங்குநாட்டின் மேற்கெல்லைகளான பஞ்சகிரிகளையும் பொதுவாக வருணித்து அவைகளில் ஒன்றான குருவகிருடிமலை என்ற குருடிமலையைச் சிறப்பாகவும் வருணித்திருக்கின்றார்.

அம்மலைகளில் சிவசொரூபமான வெள்ளிமலையையும் அதன் வடக்கே முருகக் கடவுள் சொரூபமான மருதமலையையும் அதன் வடக்கே பிராட்டியின் சொரூபமான குருவகிருடி மலையையும் வரிசையாக வருணித்திருக்கின்றார். இம்மூன்று மலைகளும் இயற்கை

யாக அமைந்திருப்பதைக் கண்டால் அவைகளை சோமாஸ்கந்த மூர்த்தமாகக் கூறலாம். மேலும் வெள்ளிமலைக்குத் தென்பால் பிரம்மகிரியும் குருடிமலைக்கு வடபால் விஷ்ணுகிரியும் (நீலகிரி) இருக்கின்றன. இவ்வைந்துமே பஞ்சகிரி என்பார்கள். இதனை பேரூர்ப் புராண ஆசிரியர்.

"அயன் வரையுமமயாளோங் கலவிரொளி வெள்ளிவெற்புப்
புயனிகர்மேனிச் செல்வன் பொருப்புயர் மருதக்குன்றென்
றியலுமைந்தடுக்கண்மாட்டு மிரும்புனற்றீர்த்தந் தோறும்
வயமருளிறைவனுர் தமலாடி பூசித்தாரால்."

(அபயப் படலம்—செ. 38)

என்ற செய்யுளில் ஆண்டிருக்கின்றார். துடிசைப் புராண ஆசிரியர் அதனையே விரிவாக 61 செய்யுள்களில் விவரித்திருக்கின்றார்.

இக்கிரிச் சருக்கத்தில் வெள்ளிமலையிலுள்ள பஞ்சலிங்கத்தின் பெருமையையும், அம்மலையிலுள்ள வல்லி, பூடு, புல்பரவிய தருக்கள் முதலிய யாவும் சடைகள் தாங்கி நிற்கும் வரலாறும், மருதமலையின் கண்ணுள்ள மருததீர்த்தம், கன்னிகை தீர்த்தம், கந்த தீர்த்தம், அனும தீர்த்தம், சரவணப் பொய்கை முதலிய தீர்த்தங்களின் வரலாறும், குருவவிருடிமலையிலுள்ள கந்த தீர்த்தம், அகத்திய தீர்த்தம், சந்திர நதி, விநாயக நதி (தன்னாசி கோவில் பள்ளம்) சிவ தீர்த்தம் குருவமுனி தீர்த்தம் (கோவில் உட்பிரகாரத்தில் உள்ளது) முதலிய தீர்த்தங்களின் மகிமையும் அம்மலைகளின் விம்மிதங்களும் கூறப் பட்டிருக்கின்றன.

மேலும் இம்மலைக்கு

| | |
|---|---|
| கிரேதாயுகத்தில் | சதுர்ப்புயாசலமென்றும் |
| திரேதாயுகத்தில் | அகத்திய பூதரமென்றும் |
| துவாபரயுகத்தில் | கந்தசைலமென்றும் |
| கலியுகத்தில் | குருவவிருடி மலையென்றும். |

பெயர்கள் உண்டான வரலாறும் கூறப்பட்டிருக்கிறது.

குருவவிருடி பூஜை சருக்கத்தில் கலியுகத்தில் குருவவிருடி என்ற ஒரு முனிவர் திருத்துடிசையில் எழுந்தருளியிருக்கும் சிவ பெருமானை வழிப்பட்டதாகவும் பெருமான் அம்முனிவருக்காகத் துடிசையில் துடியை முழக்கி நடன தரிசனம் காட்டினதாகவும் அதனால் அம்முனிவர் பெரும்பேர் அடைந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த குருவவிருடி பூஜித்த இடத்தில் ஏற்பட்ட ஊருக்கு குருவவிருடி பாளையம் என்ற பெயர் ஏற்பட்டதாம். அது பின் காலத்தில் குருடம்பாளையம் என்று மாறிவிட்டதாம். எம்பெரு

மான் துடியை முழக்கி நடனம் செய்ததால் இத்தலத்திற்கு துடியலூர் என்று பெயர் வந்ததாம். குருவவிருடி தவஞ்செய்த மலைக்கு குருவவிருடி மலை என்ற பெயர் ஏற்பட்டு பின்னுல் அப்பெயர் குருடிமலை என்று மாறிற்றும் அம்மலையிலிருந்து ஓடிவரும் பள்ளத்திற்கு தன்னுசி கோயில் பள்ளம் என்று பெயர் வழங்கி வருகிறது. இதற்கு மதுரநதி என்று மற்ருெரு பெயர் உண்டாம். இதன் கரையிலுள்ள ஊருக்கு புதுமதுரை என்ற பெயர் வழங்கி வருகிறது. குருவவிருடி போன்ற சந்நியாசிகள் தவம் செய்ததினுல் சந்நியாசி கோயில் பள்ளம் என்ற பெயர் இவ்வூர்ப் பள்ளத்திற்கு ஏற்பட்டது போலும்.

இம்மலை அம்மன் சொரூபம் என்பதற்கு இம்மலையில் முக்கியமாக விளங்கும் பொன்னூற்றம்மன் கோயிலே சான்று ஆகும். குருவவிருடி மலை என்று துடிசைப்புராணம் கூறினபோதிலும் இம்மலைக்கு அருணகிரிநாதர் காலம் முதல் குருடிமலை என்ற பெயரே வழக்கத்தில் இருக்கும் செய்தி நோக்கத்தக்கது. இப்புராணத்தில் இக்கிரியைப்பற்றிக் கூறும்போது மிகவும் அழகிய செய்யுள்களால் யமகம் திரிபு முதலிய சொல்லணிகளோடு வருணித்திருக்கிருர். உதாரணமாக சில பாடல்கள் கூறுவோம்.

வான ரங்கண்ம ழைகண்டு வாம்பொழில்
வான ரங்கண்ம லிந்தினி தாடுமால்
கான கந்தரு கற்குற மாதர்சொற்
கான கந்தரு வேதமுங் கற்பரால்.

மாத ருக்குவ யங்கிய பொன்னகர்
மாத ருக்கும கிழ்செயு மின்னிழற்
பாத வப்புடை பல்வள முந்திறம்
பாத வப்புடை யாறுகள் பாயுமால்.

சித்த ரன்பணி சிந்தைய ராகியர்ச்
சித்த ரன்பணி செய்துதி ருந்துவார்
முத்த ரும்புற மொய்ப்பர்க ழைக்குல
முத்த ரும்புற முந்திவி ளுந்துமே.

மாத வங்களை வல்லவர் மையலா
மாத வங்களை மாற்றிந டத்துவார்
பூத ரந்தரு விண்ணவர் போற்றுமப்
பூத ரந்தரு பெற்புவி யப்பதே.

வனந்தந் தாவள வாணர்க வண்கலால்
வனந்தந் தாவள மாபுனத் தோச்சுவார்
கனத்தின் பாரங்க வியச்சு மந்தெழுஉக்
கனத்தின் பாரங்க மழும்பல் காதமே.

—கோவைக்கிழார்.

# ஒழிபு.

## கன்னட தேசத்தின் ஹொய்சள அரசர் ஆலயங்களின் சிற்ப விசேடங்கள்.

## பேளூர் ஸ்ரீ சென்ன கேசவப்பெருமாள் ஆலயம்.

(91-பக்கத் தொடர்ச்சி.)

### நவரங்க மண்டபமும், சித்திரத்தூண்களும்.

இவ்வாலயத்திலுள்ள "நவரங்க மண்டபம்" மிகவும் அற்புதமான சித்திரங்களாலும், சுந்தரமான தூண்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. இதன் பேரழகை உள்ளபடி சிறப்பித்து எழுதுவதற்கு அறிவும் ஆற்றலும் எமக்கில்லாததால், விரிவாக விளக்காது விடுகின்றோம். வெளிப்பாகத்தைவிட உட்பாகத்தில் உயர்ந்த சித்திரங்கள் கண்கவர்வனப்பாக விளங்குகின்றன. மண்டபத்தின் நாற்புறச்சுவர்களிலும் பாரத - இராமாயணக்கதைகளும், விஷ்ணு லீலைகளும், வெகு நேர்த்தியாக ஓவிய வடிவில் உயர்ந்த முறையில் சிற்பிகளின் கைத்திறம் விளங்கச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்திலுள்ள சித்திரத்தூண்கள் அனைத்திலும், நடுநாயகமாகவும், சிற்பாலங்காரங்கள் நிரம்பியதாகவும் திகழ்வது பெண் பதுமைத்தூண். இந்தத்தூணும், இதன் அடிப்பீடமும், போதிகைகளும், பின்பாகத்தின் அற்புதமான சித்திரச்செதுக்கு வேலைகளும், சிற்பத்திறமைகளுடன் நேத்திரானந்தமாக விளங்குகிறது. இப்பெண்ணோவியத்தின் வலது பக்க முழந்தாளிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு முடிக்குமேலுயர்ந்து இடது பக்கத்து இடைவரையில் பிரபாவளைபோல் போர்க்கப்பட்டுள்ள கொடிகளின் இலைச்சித்திரங்கள் மேன்மையான அமைப்பும் அழகுமுடையன. ஓவியத்தின் சிரசித்தில் சூட்டியுள்ள திருமுடி அர்த்தச்சந்திரவடில் சித்திரித்திருப்பது

நவீனமானது. மார்பின்மீது அணிவிக்கப்பட்டிருக்கும் ஆபரணங்களும் இடையலங்காரங்களும் மிகவும் நுட்பமான சித்திரவேலைப்பாடுகள் நிரம்பியன. பாதச்சிலம்புகளும், வீரதண்டையும், முன்கை கங்கணங்களும் புதிய முறையில் செய்யப்பட்டு அதிசய அழகுடையனவாக விருக்கின்றன. முன்கைக் கங்கணங்கள் முழங்கைக்கு மேலேறவும், கீழேயிறங்கவும் படியாக சித்திரிக்கப்பட்டிருக்கும் செய்கை மிகவும் போற்றத்தக்கது. ஒய்யாரமாக நீட்டியிருக்கும் இடது கையின்நடுவில் பஞ்சவர்ணக்கிளியொன்று வீற்றிருந்து மார்பில் பூண்டுள்ள முத்துச்சரத்தைக் கொத்துவது திறமையான சித்திரவேலை. இச்சித்திரத்தூணின் பெண் ஓவியம் மற்ற சித்திரங்களுக்கெல்லாம் மேலானதென்றே கூறலாம்.

## மூலவிக்கிரகங்களும், பெருமாள்பெயரும்.

ஸ்ரீ சென்னகேசவப்பெருமாள் திருவுருவம், சிலையில் சிருங்காரமாகச் செதுக்கிப் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கிறது. இச்சிலையுருவத்திற்கு "விஜய நாராயணன்" என்று பெயர். இம்மூர்த்தி ஆறடி உயரத்தில் விளங்குகின்றனர். பீடம் மூன்றடி உயரம் இருக்கின்றது. பெருமாள் சிரத்திற்குமேலுள்ள கிரீடம் மிகப்பெரிய பேரழகுமாய் விளங்குகிறது. இவரது திருநாமம் விஜய நாராயணர் என்பது. விஜய நாராயணரின் இருபுறத்திலும் அவரது இருமனைவியர்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். அவர்கள் பிம்பங்களும் அழகாகவேயுள்ளன. இச்சிலையுருவங்களை உற்றுநோக்குவார்க்கு அவற்றின் நல்லமைப்பும், புராதன சிற்பவல்லார்களின் உயர்ந்தலட்சியங்களும், எண்ணங்களும், திறமையும் நன்கு புலனுகும்.

சுற்றுப்பிரகாரச் சுவர்கள் மீது பார்வைக்கு நிறுத்தப்பட்டிருக்கும் பல்வேறு வகையான மதிலோவியங்கள் மிகவும் நேர்த்தியாகவும், விரும்பிப்பார்க்கக் கூடியனவாகவும் இருக்கின்றன.

கிழக்குத் தெற்கு வடக்குத்திருவாயில்களின் மேல்நிலயத்திலும், கோபுரங்களிலும், விஷ்ணு லீலைக்குரிய மூர்த்தங்களே சிற்பவுருவங்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவைகளில் பிரதானமாக விளங்குவன, வராகம், நரசிம்மம், கேசவன் முதலியன.

இவ்வாலயத்தைப்பற்றி ஆங்கில நூலாசிரியராகிய பெர்கடஜன் துரைமகனர், "History of Indian and Eastern Architectwre" என்ற தமது நூலில் அடியில் வருமாறு கூறியிருக்கின்றனர்:—

"இதன் அளவாவது, மாதிரியாவது இந்த ஆலயத்தின் பெருந்தன்மைக்குக் காரணங்களாகமாட்டா. நிர்மாண விசேடங்களின் பேரழகும், அதன் அமைப்புமே உயர்வுக்கு மூலமாகும். அற்புத வடிவங்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ள கற்றிரைகளின் சிற்ப நுணுக்கங்கள் மேலானதெனினும், ஆலய கர்ப்பகிருகத்தின் அடிப் பீடச் சித்திரங்களுக்கும், சுவரலங்கார ஓவியங்களுக்கும் நிகராகாது. இவ்வாலயத்து மகா மண்டபச் சுவர் சித்திரங்கள்—கொடுங்கைகள்—வளைவுகள், விமான வடிவுகள், செதுக்குச்சிவலைகள், விளிம்புச்சித்திரங்கள் முதலியவற்றிற்குச் செய்யப்பட்டிருக்கும் வேலைகள், பிரபஞ்சத்தின் இதன் அளவேயுள்ள வேறு எந்த நிர்மாணவேலைகளுக்கும் பிடித்திருக்கமாட்டாவென்பது எனது முழு நம்பிக்கை. சிற்பக்கலையின் திருஷ்டியைப் பின்பற்றி நோக்கினல், இந்த நிர்மாணம் அனைத்தும் பெரிதாகமாட்டா. ஆனல், சௌந்தர்ய உயர்வின் தன்மையைப்பற்றிய உன்னதமான கலையின் அபிருசி (கீர்த்திப்பிரியம்) க்குச் சுவை மலிந்த இன்பக் குவியலாகும்." என்பது.

கண்ணிற்கும், மனத்திற்கும் மட்டற்ற இன்பத்தைப் பெரிதும் ஊட்டவல்ல சிற்பங்களையும், சித்திரங்களையும் ஓரிடத்தில் குவிந்து தோன்றும்படி எண்ணற்ற பொருட்செலவில் ஆலயத்தைக் கட்டுவித்த ஹொய்சள மன்னர்களின் அன்புக்கும், தியாக புத்திக்கும் யாவரும் அவ்வரசர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களே.

கைதேர்ந்த சிற்பவல்லார் ஓவியங்களையும், உயர்ந்த சிற்ப நலங்களையும், நம்மவர் கண்டுகளிக்க விரும்புவார்களானல், நமது இந்திய நாடு முன்னேற்றமடைவதற்கு ஒருவழிகாட்டியாகும். இக் கட்டுரையைக்கண்ணுறும் ஒவ்வொருவரும், மைசூர் மாகாணமாகிய கன்னட நாட்டிலுள்ள பேளூர் ஸ்தலத்திற்கு யாத்திரை சென்று அங்கு அழகின் அவதாரமாக விளங்கும் ஸ்ரீ சென்னகேசவர் ஆலயத்தையும், சிற்பிகள் பல ஆண்டுகளாக முயற்சி தளராமல் நேர்த்தியாகச்செய்து முடித்துள்ள சிற்ப சித்திரக்காட்சிகளையும் கண்பெற்ற பேருகத் தரிசித்து இன்பமடையவேண்டுகிறேம்.

கோவை, திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்.

## மதிப்புரை.

### பெருவுடையார் கோயில் என்ற பெரிய கோயில்.

தஞ்சை ஸ்ரீபிரகதீசுவரர் ஆலயத்தை அறியாதார் எவரும் இருக்கமாட்டார்கள். இவ்வாலயந்தான் பெருவுடையார் கோயில் என்பது. இதனை 985 முதல் 1013 வரை ஆண்ட சிறந்த சோழ சக்கரவர்த்தியான முதல் இராஜராஜதேவர் கட்டினார். அதற்கு அவர் பெயரால் இராஜராஜேஸ்வரம் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இதனை கருவூர்த்தேவர் தம் திருவிசைப்பாவில் பாராட்டியுள்ளார். சரித்திர ஆராய்ச்சியாளர்களாலும் ஓவிய நூல் ஆராய்ச்சியாளர்களாலும் இவ்வாலயம் புகழப்பட்டுள்ளது. இதனுடைய வரலாறு தமிழர்கள் ஒவ்வொருவரும் அறியவேண்டியது அவர்கள் கடமை. அதனை அறிவிக்கும் பொருட்டு இச்சிறு நூல் எழுதப்பட்டுள்ளது. தஞ்சை அரண்மனை தேவஸ்தானங்களுள் இவ்வாலயம் முக்கியமானது. அத்தேவஸ்தானங்களின் பரிபாலகரான உயர் திரு. J. M. சோமசுந்திரம் பிள்ளை B. A., B. L., அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார்கள். பொது ஜனங்கள் தெளிவாக அறிந்து கொள்ளும்படி எளிய நடையில் பல ஆராய்ச்சிகளை எடுத்து எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். ஆலயம், இராஜராஜதேவர் கருவூர்த்தேவர் முதலியபடங்கள் அடங்கியிருக்கின்றன. இந்நூல் விலை இரண்டு அணா தான். 2¾ அணா ஸ்டாம்பு அனுப்பினால் இந்நூல் தபாலில் வரும். இதன் விற்பனைத்தொகை இக்கோயில் மின்சாரவிளக்குக்கைங்கரியத்திற்காக வழங்கப்பெறும். ஆகையால் தமிழன்பர்களும் சைவமக்களும் இந்நூலைத் தருவித்து இக்கைங்கரியத்திலும் ஈடுபடுவார்களாக.

# திங்கட் செய்திகள்.

சென்ற ஆண்டு கொங்கு மலரில் திருவஞ்சைக்களத்தைப்பற்றி பல கட்டுரைகள் வெளிவந்தன. கற்கடக மாதம் (ஆடி மாதம்) ஸ்வாதி நக்ஷத்திரத்தன்று திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமாளும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கையிலே அடைந்தார்கள். அத் திருநாளைத் தமிழ்நாட்டு ஆலயங்களில் பாராட்டி வருகிறோம். ஆனல் அது நடந்த இடமாகிய திருவஞ்சைக்களத்து ஆலயத்தில் இத்திருநாள் பாராட்டப்படுவதில்லை. சென்ற ஆண்டில் மிகவும் சிரமம் எடுத்துக்கொண்டதினல் இத்திருநாள் ஒருவாறு அப்புனித நகரில் பாராட்டப்பட்டது. அதன் விவரத்தை சென்ற ஆண்டு மலர்களில் பதிப்பித்திருக்கின்றோம். சென்ற ஆண்டைப் போலவே ஒவ்வொரு ஆண்டிலும் இத்திருநாள் கொண்டாடப் பெறவேண்டுமென்பது சைவமக்களின் நோக்கம். அதனை உத்தேசித்து கொச்சி அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்ததில் ஆரம்பத்தில் காரியங் கூடவில்லை. ஆனல் சைவசமயத்திற்கு ஒரு பாக்கியவசமாக கொச்சி சீமைக்கு தற்போது கோவை Sir ஷண்முகம் செட்டியார் சர்வாதிகாரியாக ஏற்பட்டனர். அவரிடம் இச்செய்தியைத் தெரியப்படுத்தியதில் அவர் 23—6—35 தேதியன்று திருச்சூர் என்ற திருச்சிவப்பேரூருக்கு வரும்படியாகத் தெரியப்படுத்தினர். அதன்படி நமது ஆசிரியரும் திரு. சுப்பிரமணிய முதலியாரும் திரு. சதாசிவம் பிள்ளையும் சென்று சந்தித்ததில் இவ்வாண்டுமுதல் கொண்டு அத் திருவிழா ரூ. 100 செலவில் நடைபெறவேண்டும் என்று உத்திரவு செய்தார். ஆலயப்பெருமையையும் இருநாயன்மார்களின் சரித்திர விவரங்களையும் அச்சடித்து மலையாளத்தில் பிரசுரிப்பதாகவும் வாக்களித்துள்ளார். தமிழ்நாடு அவருக்கு நன்றிசெலுத்தக்கடமைப் பட்டுள்ளது.

நாளது வருஷம் ஆகஸ்டு மாதம் 7-ம்தேதி திருவிழா நடைபெறும். அன்பர்கள் திருவஞ்சைக்களம் சென்று ஆனந்திப்பார்களாக.

Regd. No. M. 3087.

சேக்கிழார் பெருமான் அருளிய

## பெரியபுராணம்

என்னும்

# திருத்தொண்டர்புராணம்

படங்களுடனும்

கோவை C. K. சுப்பிரமணிய முதலியார் B. A., அவர்களது

உரையுடனும்

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு.

யாவரும் இலகுவில் வாங்கிப் பயனடையுமாறு சஞ்சிகைகளாக

வெளிவரும்.

முதற் சஞ்சிகை (முற்பகுதியும்-பிற்பகுதியும்) வெளியாயிருக்கிறது.

சஞ்சிகை ஒன்றுக்கு ராயல் 8 பக்கமுள்ள 20 பாரம் அதாவது 160 பக்கங்கள் கொண்ட ஏறக்குறைய 300 பாட்டுக்களும் உரையும் அடங்கிய பகுதியாக சுமார் 12 சஞ்சிகைகளில் முற்றுப்பெறும் என நம்புகிறோம்.

பதவுரை — விளக்கவுரை — வெகுகாலம் முயன்று சேர்த்த விசேட ஆராய்ச்சிக்குறிப்புக்கள் — சிவதலங்கள் முதலியவற்றின் குறிப்புக்கள் — இப்புராணத்தால் அறிந்து ஒழுகத்தக்க கற்பனைகள் அவ்வப்புராண வசனச் சுருக்கம் — தலத்தேவாரங்கள் — அவற்றின் குறிப்புக்கள்—பல பழைய ஏடுகள் பரிசோதித்துக் கண்ட பாடபேதங்கள் — பாராயணஞ் செய்வோர் வாசித்து நிறுத்தும் இடக்குறிப்புக்கள் — கலைஞான விஞ்ஞான சாத்திரக் குறிப்புக்கள் முதலியவை இதில் வெளிவரும்.

சஞ்சிகை ஒன்றுக்கு விலை ரூ. 1. தபாற்கூலி வேறு.

| | | |
|---|---|---|
| சஞ்சிகை ஒன்றுக்கு முன்பணம் தபாற்கூலியுடன் | ரூ. | 1—4—0 |
| வி. பி. மூலமாயின் | ,, | 1—7—0 |

இரண்டாவது சஞ்சிகை வெளிவருமுன்னர் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வோர்களுக்கு மேற்கண்ட விலையாகும். பின்னர் வாங்குவோர்க்கு சஞ்சிகை ஒன்று ரூ. 1—4—0 தபாற்சிலவும் ஆகும்.

இலங்கை நண்பர்களுக்கு V. P. தபாற்சிலவு 89 சதம் ஆவதால் அன்னவர்கள் முன்பணமனுப்பியே பெற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

S. நமசிவாயன்,
கோவைத் தமிழ்ச்சங்கம்,
கோயமுத்தூர்.

Edited & Published by Rao Sahib C. M. Ramachandran Chettiar, Coimbatore & Printed by Mrs. Balasundara Shanmughasundaram at The Royal Press, Raja Street, Coimbatore.